DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -13

| | | |
|---|---|---|
| Name | : திரு. பாலு | Caste: |
| Father's Name: | திரு. அசுபதி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A11, A13 to A18 present. A8 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 08.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது முழு பெயர் பால்சாமி என்னை பாலு என்று கூப்பிடுவார்கள். கூலி வேலை செய்கிறேன். இறந்துபோன 5 நபர்களையும் தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் மற்றும் ஊர்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் எனது ஊர்காரர்கள் மற்றும் உறவினர்கள்.

16.05.2008 அன்று நான் வயலுக்கு போய்விட்டு காலை 9.00 மணியளவில் வீட்டிற்கு வந்து சாப்பிட்டு கொண்டிருந்தேன். ஊரிலிருந்து எனது தங்கையின் குழந்தைகள் வந்திருந்தார்கள். அப்போது வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. என்வென்று பார்த்தபோது ஒருவரைஒருவர் வெட்டிகொள்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் பயந்துகொண்டு என் தங்கையின் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவர்களை ஆண்டிபாளையத்தில் கொண்டுபோய்

விட்டுவிட்டேன். பின்னிட்டு பிற்பகல் 12.00 மணிக்கு வங்குடிக்கு திரும்பினேன்.

அன்றைய தினம் பிற்பகல் 1.00 முதல் 2.00 மணிக்குள்ளாக போலிசார் என்னிடம் மண் பரிசோதனைக்காக கையொப்பம் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். கொலை நடந்த இடங்களில் போலிசார் மண்ணை மாதிரிக்காக எடுத்தார்கள். ( சாட்சி பதற்றமாக இருக்கிறார். தனக்கு பதற்றமாக இருப்பதாக சொல்லுகிறார்) பிரபு கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து போலிசார் ரத்தம்படிந்த மண்ணை எடுத்தார்கள். நான் சாட்சியாக வரமாட்டேன் என்று சொன்னேன். ஆனால் போலிசார் என்னிடம் எனது வீட்டிற்கு அருகில் தான் பிரபு கொலைசெய்யப்பட்டதாகவும், எனவே மண் பரிசோதனை செய்வதற்காக நான் கையொப்பம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்கள்.

என்னிடம் காட்டப்படும் பிரபு என்பவர் இறந்த இடத்திலிருந்து மண் கைப்பற்றப்பட்டதற்குரிய மகஜர் நான் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். அந்த மகஜர் அ.சா.ஆ.4. நான் 4 ஆவணங்களில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்(இறந்துபோன பிரபுவின் தலை இருந்த இடத்திலிருந்து மண் கைப்பற்றப்பட்டதற்குரிய மகஜர் சாட்சியிடம் காட்டப்பட்டது ) அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5.

என்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். ( பார்வை மகஜர் சாட்சியிடம் காட்டப்பட்டது.) அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6. என்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்(இறந்துபோன சுரேஷ் கிடந்த இடத்திலிருந்து மண் கைப்பற்றப்பட்டதற்குரிய மகஜர் சாட்சியிடம் காட்டப்பட்டது ) அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.7.

என்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (ரத்தம்தோய்ந்த சூலம் மற்றும் சிமெண்ட் மண்ணுடன் கலந்த ரத்தம்தோய்ந்த மண் சிறிதளவு ஆகியவை கைப்பற்றப்பட்டதற்குரிய மகஜர் சாட்சியிடம்

காட்டப்பட்டது. ) அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.8. என்னிடம் காட்டப்படும் மற்றொரு மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

( தர்மலிங்கம் என்பவரது பிரேதம் கிடக்கும் இடத்தின் அருகிலிருந்து ரத்தம் தோய்ந்த மண் மற்றும் ரத்தம்தோயாத மண் ஆகியவை கைப்பற்றப்பட்டதற்குரிய மகஜர் சாட்சியிடம் காட்டப்பட்டது ). அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.9. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

16.05.2008 அன்று காலையில் நான் எனது சொந்த வேலையாக பாப்பகுடி சென்றுவிட்டு 11.00 மணியளவில் ஊருக்குள் நுழைந்தபோது காசிநாதன், சுரேஷ், பிரபு, மகாலிங்கம், தர்மலிங்கம் ஆகியோர் கொலைசெய்யப்பட்டுவிட்டதாக நான் கேள்விபட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ( சாட்சி நீதிமன்றத்திற்கு மரியாதை அளிக்கும் வகையில் சாட்சி கூண்டில் நிற்கவில்லை. பதிலும் அளிக்கவில்லை. அதற்காக நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டார்)

போலிசார் விசாரணையில் நான் மேற்படி நபர்கள் கொலை செய்யப்பட்டு கிடந்ததை பார்த்ததாகவும், அந்த சமயத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டதாகவும் சொல்லவில்லை. போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்ததாகவும் அதற்கு நானும், வேல்முருகனும் போலிசாருக்கு உதவியாக இருந்ததாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. பிரபுவின் தலை கிடந்த இடத்திலிருந்து போலிசார் மண்ணை எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10.

போலிசார் விசாரணையில் நான் சுரேஷ் கொலையுண்டு கிடந்த இடத்திலிருந்து ரத்தம் தோய்ந்த மற்றம் தோயாத மண் ஆகியவைகளை போலிசார் மகஜரில் கைப்பற்றியதற்கு சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் நான் தர்மலிங்கம் கொலையுண்டு கிடந்த இடத்திலிருந்து ரத்தம்

தோய்ந்த மற்றம் தோயாத மண் ஆகியவைகளை போலிசார் மகஜரில் கைப்பற்றியதற்கு சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் நான் தர்மலிங்கத்தின் தலை காளியம்மன் கோவில் எதிரில் உள்ள சூலத்தில் குத்தப்பட்டு இருந்த இடத்தில் ரத்தம் படிந்த சூலத்தையும், ரத்தம் படிந்த மற்றும் படியாத மண் ஆகியவைகளை போலிசார் மகஜரில் கைப்பற்றியதற்கு சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லவில்லை.

என் முன்னிலையில் தான் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும், மேலே சொன்ன இடங்களிலிருந்து ரத்தம் படிந்த மண், ரத்தம்படியாத மண் ஆகியவற்றின் மாதிரிகளையும் மற்றும் சூலத்தையும் போலிசார் மகஜர் தயார்செய்து கைப்பற்றினார்கள் என்றாலும், நான் போலிசார் விசாரணையில் உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

நான் மற்றொரு நீதிமன்றத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளித்தேன். அந்த வழக்கில் நான் அளித்த சாட்சியத்தில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்ததாக நான் சொல்லவில்லை. சிறார் நீதிமன்றத்தில் இதே சாட்சியால் அளிக்கப்பட்ட சாட்சியத்தில் மறுக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11. ( எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு)

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது போலிசார் என்னிடம் இப்படித்தான் சாட்சி சொல்லவேண்டுமென்று சொல்லிகொடுத்ததின்பேரில் தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. எனவே சம்பவஇடம் எதுவென்று எனக்கு தெரியாது என்றால் பிரபுவின் பிரேதம் கிடந்த இடம் எனக்கு தெரியும்.

நான் கையொப்பம் செய்துள்ள ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தான் மண் பரிசோதனைக்காகத்தான்

கையொப்பங்கள் செய்தாக சாட்சி சுயமாக சொல்லுகிறார். போலிசார் எந்தெந்த இடத்திலிருந்து என்னென்ன பொருட்களை கைப்பற்றினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் பிரபு என்பவர் இறந்துகிடந்த இடத்திலிருந்து மண் எடுத்தது பற்றி மட்டும் எனக்கு தெரியும்.

மற்ற வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் என்னிடம் அனைத்து கையொப்பங்களையும் ஒரே இடத்தில் வைத்து ஒன்றன்பின் ஒன்றாக வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். எனக்கு முன்பாக வேல்முருகன் என்பவர் அந்த ஆவணங்களில் கையொப்பம் செய்திருந்தார்.

வேல்முருகன் அந்த ஆவணங்களில் என் முன்பாக ஒரேநேரத்தில் கையொப்பம் செய்தார் என்றால் அவர் என் முன்பாக கையொப்பம் செய்யவில்லை. எனவே அதுபற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றபோது பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு சென்று கையொப்பம் செய்யவில்லை. நான் அனைத்து ஆவணங்களிலும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவற்றில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்திருக்கிறேன் என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

<u>6–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். நான் வழக்கமாக காலை 7.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிடுவேன் என்றால் சம்பவ தினத்தன்று நான் வேலைக்கு போகவில்லை. சம்பவத்தினத்தன்று எங்கள் கிராமத்திற்கு 50க்கும் மேற்பட்ட போலிசார் வந்தார்கள். பிரபு இறந்துகிடந்த இடத்தில் எவ்வளவு பரப்பளவிற்கு ரத்தம் சிதறி கிடந்தது என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரிந்த சங்கதிகள் அனைத்தையும் நான்

முதல்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நான் சிறார் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் "16.05.2008 அன்று காலை 9.00 மணிஇருக்கும் அப்போது என் மனைவி எனக்கு போன் செய்து ஒருவரையொருவர் வெட்டிகொள்கிறார்கள் இங்கு வரவேண்டாம் என்று கூறினார். 2 மணிக்கு போன் செய்து பிரேதங்களை போலிசார் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் ஊருக்கு வரலாம் என்று சொன்னார். அதன்பின் வந்தேன் " என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

நான் சிறார் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் என்னுடன் யார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று நான் சாட்சியம் அளித்திருக்கிறேனா என்றால் இல்லை.

**மேற்கண்ட குறுக்கு விசாரணையானது 8 ஆம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.